NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 3 September 2020

# உலகத் தரவரிசை: என்யுஎஸ் தனது இடத்தை தக்கவைத்தது

## என்டியு தரத்தில் முன்னேற்றம்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்யுஎஸ்) உலக, ஆசிய அளவிலான அதன் தரத்தை தக்கவைத்துக் கொண்டு உள்ளது. உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் பட்டியலில் 25வது இடத்தையும் ஆசிய அளவில் மூன்றாவது இடத்தையும் அது தொடர்ந்து வகிக்கிறது. உலகின் பல்கலைக்கழகங்களை தரவரிசைப்படுத்தும் டைம்ஸ் உயர் கல்வி அமைப்பு நேற்று அதன் அண்மைய பட்டியலை வெளியிட்டது.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (என்டியு) இந்த ஆண்டு ஓர் இடம் முன்னேறி 47வது இடத்தைப் பிடித்துள்ளது.

பிரிட்டனின் ஆக்ஸ்ஃபர்ட் பல்கலைக்கழகம் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக முதல் இடத்தில் உள்ளது. அதற்கு அடுத்த நான்கு நிலைகளில் அமெரிக்காவின் ஸ்டான்ஃபர்ட், ஹார்வர்ட், கலிஃபோர்னியா தொழில்நுட்பக் கல்விக்கழகம், மெசசூசட்ஸ் தொழில்நுட்பக் கல்விக்கழகம் ஆகியன உள்ளன.

20வது இடத்தை ஆசியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகமான சீனாவின் சிங்குவா பல்கலைக்கழகம் பெற்று உள்ளது. ஆசிய வட்டார பல்கலைக்கழகம் ஒன்று முதல் 20 இடத்துக்குள் வந்திருப்பது இதுவே முதல்முறை.

மொத்தம் 13 செயல்முறை அம்சங்களின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களின் தரம் பிரிக்கப்படுகிறது. அவை ஐந்து குழுக்களில் இடம்பெற்று உள்ளன. கற்பித்தல் (கற்றல் சூழல்), ஆராய்ச்சி (அளவு, வருவாய் மற்றும் நன்மதிப்பு), மேற்கோள்கள் (ஆய்வாற்றல்), அனைத்துலகத் தோற்றம் (பணியாளர், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி), துறை வருவாய் (அறிவாற்றல் மாற்றம்) போன்று குழுக்கள் அவை.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.